TAM209F2


# சானைக்காரன் சலீம்

**ஆதாரம்: Tulika**





சலீம் ஒரு சானைக்காரன். அவன் ஊர் ஊராகச் சென்று பல பொருட்களுக்குச் சானை தீட்டுவான் – காய் நறுக்கும் கத்தி, இறைச்சி வெட்டும் அரிவாள், தேங்காய் துருவி, செடி வெட்டும் கத்திரி…



அவனுடைய சானை தீட்டும் இயந்திரம் மிகவும் எளிமையானது. ஒரு மிதிவண்டியின் சக்கரமும், சானைக்கல்லும் ஒரு ஸ்டண்டில் பொருத்தி இருக்கும்.

சலீம் மிதிகட்டையை அழுத்த, அது சானைக் கல்லைச் சுழற்றி, கத்தியைத் தீட்டும்.



கட்டக்-கட்டக்... கட்டக்-கட்டக்...

கட்டக்-கட்டக்... மிதிவண்டியின் ஓசை

சொய்ங்-சொய்ங்... சொய்ங்-சொய்ங்...


சொய்ங்-சொய்ங்... சக்கரத்தின் இசை

ஸ்ஸ்ஸ்ட்ட்-ஸ்ஸ்ஸ்ட்ட்... ஸ்ஸ்ஸ்ட்ட்-ஸ்ஸ்ஸ்ட்ட்...

ஸ்ஸ்ஸ்ட்ட்-ஸ்ஸ்ஸ்ட்ட்... சாணைக்கல் மேல் கத்தி

ஸ்ஸ்ஸ்க்-ஸ்ஸ்ஸ்க்... ஸ்ஸ்ஸ்க்-ஸ்ஸ்ஸ்க்...

ஸ்ஸ்ஸ்க்-ஸ்ஸ்ஸ்க்... சாணைக்கல்லில் தீப்பொறி




ஆனால், அவன் குடும்பத்துக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்க முடியவில்லை. எனவே, புதிய ஒரு ஊருக்குச் சானை தீட்டச் சென்றான்.




நெடுந்தூரம் நடந்து ஒரு காட்டுக்கு வந்தான். பசி எடுத்தது. தன் மனைவி ஆயிஷா கொடுத்த உணவை ஒரு ஆலமரத்தின் அடியில் உட்கார்ந்து சாப்பிட்டான். பின் காட்டுக்குள் நடந்து சென்றான்.



காடு என்றாலே சலீமுக்கு பயம். திடீரென்று “ப்ஸ்ஸ்ட்ட்!” என்று ஒரு சத்தம். சலீம் திரும்பிப் பார்த்தான். “யார்...யாரது?” என்று மெதுவாகக் கேட்டான்.



அவன் முன்னால் ஒரு சிங்கம் வந்தது. “உஷ்… வாயை மூடு! சத்தம் போட்டல் உன்னை முழுங்கி விடுவேன்!” என்று கர்ஜித்தது.




பயந்து போன சலீம், “என்னை விட்டு விடு. உனக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டான். சிங்கம் “என் நகங்களும் பற்களும் மழுங்கி விட்டன. அவற்றைச் சானை பிடித்து கூர்மையாக்கு” என்றது.



பயந்து கொண்டே சிங்கத்தின் பற்களையும் நகங்களையும் சானை பிடித்தான் சலீம்.

சிங்கத்தின் பற்களும் நகங்களும் கூர்மையாக பலபல என்று மின்னின.



மகிழ்ச்சியடைந்த சிங்கம், “இங்கேயே இரு! இதோ வருகிறேன்!” என்று சொல்லிவிட்டு, ஒரு புதருக்குள் ஓடியது.  இரண்டு காட்டுக் கோழிகளைக் கொண்டு வந்து சலீமுக்குப் பரிசாகக் கொடுத்தது



பயத்துடன் சிங்கத்திற்கு நன்றி சொல்லிவிட்டு, வீட்டுக்குத் திரும்பி வந்தான். தன் மனைவியிடம் நடந்ததைச் சொன்னான். ஆனால் ஆயிஷா அதை நம்பவில்லை.



மறுநாள் காலை கதவு தட்டும் சத்தம் கேட்டது. சலீம் எழுந்து வந்து கதவைத் திறந்தான். வெளியே…

திராட்சை கொத்துடன் நரி…

வாழை சீப்புடன் குரங்கு…

ஆட்டைக் கவ்விக் கொண்டு சிறுத்தை…

இரண்டு முயல்களைக் கவ்விக் கொண்டு புலி…

சலீமுக்கு ஒன்றுமே புரியவில்லை.



“நாங்கள் உனக்குச் சில பரிசுகள் கொண்டு வந்து இருக்கிறோம். எங்கள் பற்களையும் நகங்களையும் கூர்மை படுத்த முடியுமா?” என்றன அனைத்தும் ஒரே குரலில்.

இனிமேல் சலீமின் குடும்பம் பசியோடு இருக்காது.